காக திட்டமிட்டு அந்த ஊர்வலத்திலே வந்தவர்களைத் தாக்கு வதற்காக திட்டமிட்டு பின்னாலே ஒரு சதி நடந்திருக்கிறது என்ற குற்றச் சாட்டை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம் 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வெள்ளம். அந்த மக்கள் வெள்ளத்தை ஒழுங்கு படுத்துவதற்காகத்தான் காவல் துறை இருந்து தீரவேண்டும். ஆனால் அன்றைக்குச் சரியாக புரட்சித் தலைவருடைய வேன் சென்றதற்குப் பின்னாலே வழிமறித்து அந்த ஊர்வலத்தைத் தாக்கி, ஊர்வலத்திலே வந்த பல்லாயிரக்கணக்கானவர்களுடைய மண்டைகளைப் பிளந்து அந்த ஊர்வலத்தை திட்டமிட்டு தாக்க நடந்ததற்கான சதிச் செயலை சரியான விசாரணை மூலம், அன்றைக்கு யார் செய்தார்கள், யாருடைய தூண்டு தலின் பேரில் செய்தார்கள் என்று கண்டறிந்து அவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று வேண்டி விரும் பிக்கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தேர்தல் காலங்களில் ஊருக்கு ஊர், தொகுதிக் குத் தொகுதி நடந்த போலீஸ் வெறியாட்டத்தை இந்த நேரத் தில் சுட்டிக்காட்டியாக வேண்டும். போலீஸ்காரர்களாக செய்யவில்லை என்பதற்குப் பல்வேறு உதாரணங்கள் சொல்ல முடியும். என்னுடைய தொகுதியில் 21-5-1980 அன்று ஒரு பொதுக் கூட்டம் நடக்கிறது. அந்தப் பொதுக் கூட்டத்தில் நண்பர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். சரியாக 8 அல்லது 8 1-2 மணிக்கு கூட்டத்தைக் கலைக்கிற முயற்சியில் மற்றக் கட்சியைச் சேர்ந்தவர்கள்—சொன்னால் கோபித்துக் கொள் வார்கள்—இன்றைக்கு பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறவர்கள் தங்கள் தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சியோடு மிரட்டு கிறார்கள். அப்படி மிரட்டுகிற நேரத்தில் கல் எறிகிறார்கள். சுற்றியிருந்து நாலா பக்கத்திலும் இருந்து கல் எறிகிறார்கள், கல் எறியப்படுகிற அந்த நேரத்தில் கூட்டம் நடத்தியவர்கள் தொடர்ந்து கூட்டத்தை நடத்த முடியாமல் மேடையை விட்டு கீழே இறங்குகிறார்கள். கீழே இறங்கிய 6, 7 கழகத் தோழர் களுக்கு மண்டை உடைகிறது. ஒலிபெருக்கி உடைத்து நாச மாக்கப்படுகிறது. அத்தனைக்கும் பின்னாலே இந்திந்த கட்சிக் காரர்கள், இன்னின்னார் என்று அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் கள் மீது புகார் கொடுக்கப்படுகிறது. ஆனால் புகார் கொடுத் தவர்களே கைது செய்யப்பட்டு அவர்கள் மேல் வழக்கு தொடரப் படுகிறது. வழக்குகள் கூட ஒரு 6 பேர்கள் மேல் தான் தொடரப் பட்டது. ஒரு 5, 6 நாட்கள் கழித்து அந்தக் கட்சிக்காரர் களுடைய நிர்பந்தத்தின் பேரில் அப்போது போலீஸ் இன்ஸ் பெக்டராக இருந்தவர்—இன்று தமிழக அரசு பணியான சி.ஐ.டி. பிரிவின் அமைப்புச் செயலாளராக இருப்பவர்—ஜெய ராமன் என்பவர்—அந்தக் கட்சிக்காரர்கள் சொன்னார்கள் என்பதற்காக கைது செய்தேன் என்று சொன்னார்கள். இன்றைக் குக் கூட அந்த அதிகாரியை அழைத்துக் கேட்டால் சொல்லு வார். உசிலம்பட்டி இன்ஸ்பெக்டரைக் கேட்டால் சொல்லு வார், ஏழுமலை சப் இன்ஸ்பெக்டரைக் கேட்டாலும் சொல்லு வார்.

மேலே இருந்து உத்தரவு வந்தது. நாங்கள் பின்னாலே கைது செய்தோம் என்று கூறுவார்கள். அந்த அளவுக்கு அன்றைக்கு ஒரு விதமான கட்சி அரசியலுக்கு அவர்கள் இந்த நிர்வாகத்தைப் பயன்படுத்தினார்கள் என்கிற குற்றச்சாட்டைச் சொல்லி தலைவர் அவர்கள் அவசரப்படுகிற காரணத்தால் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பிரச்சினை ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான சேடப்பட்டிக்கு காவல் நிலையம் வேண்டும். மக்கள் நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதைப் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான பைல்கள் மேலே இருந்து கீழேயும் கீழே இருந்து மேலேயும் போய்க்கொண்டு இருக்கிறது. அந்த சிரமத்தைப் போக்கி இந்தக் காவல் நிலையத்தைப் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியதிலும், திரு. பம்மல் நல்லதம்பி அவர்கள் பேசியதிலும், திரு. அப்துல் ரசாக் அவர்கள் பேசியதிலும், குறிப்பாக, கட்சிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொன்ன பகுதிகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெற வேண்டும் என்று ஆணையிடுகிறேன்.

<u>திரு. கே. எம். அப்துல் ரசாக் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காவல் துறை மானியத்தின் மீது ஓரிரு கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். என்னுடைய ஆலந்தூர் தொகுதியில், கே.கே. நகரில் ஒரு காவல் நிலையம் வேண்டும். அதேபோல், ஆதம்பாக்கத்தில் ஒரு காவல் நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்த மானியத்தின் மீது பல கோணங்களில் பேசியிருக்கிறார்கள். நான் ஒரு உதாரணத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நடந்து முடிந்த தேர்தலில்நடைபெற்ற பிரச்சாரத்தின்போதுஇங்கே உள்ள அமைச்சர்களை வங்கக் கடலில் நிற்கப் போகிறீர்கள் என்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே இருக்கிறார்கள். அந்த நிலையை எண்ணி நாட்டு மக்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து ஒரு நல்ல தீர்ப்பைத் தந்து இருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில் குரோம்பேட்டையில் சி.என்.சி. என்ற தொழிற்சாலை இருக்கிறது, 27 மாதங்களாக அது மூடப்பட்டு திறக்கப்படாமல் இருக்கிறது கிட்டத்தட்ட 400